ழெசிகா : எதற்கும் எதற்கும் நடுவில்?

உய்கோ : இருபது, அறுபது.

ழெசிகா : உயரமா? குள்ளமா?

உய்கோ : சுமார்.

ழெசிகா : அங்க அடையாளங்கள்?

உய்கோ : அவருக்குக் குறிப்பிடும்படியாக எந்த அடையாளமும் இல்லை.

ழெசிகா : பெரிய கெட்டிக்காரனைப் போல் நடிக்கிறீர்கள், ஆனால் அவரைச் சரியாக வருணிக்க உங்களால் முடியவில்லை.

உய்கோ : முடியாதாவது? என்னால் நிச்சயம் முடியும்.

ழெசிகா : இல்லை, உங்களால் முடியாது என்கிறேன்.

உய்கோ : (யோசித்துவிட்டுப் பிறகு திடீரென்று) புள்ளி வைத்த டை கட்டியிருந்தார்.

ழெசிகா : புள்ளி வைத்த டையா?

உய்கோ : ஆமாம், பொட்டுபொட்டாக.

ழெசிகா : பார்த்தீர்களா, உங்கள் வார்த்தையாலேயே குட்டு வெளிப்பட்டு விட்டது. அவர் உங்களுடன் பேசிக் கொண்டிருந்த நேரம் முழுவதிலும் நீங்கள் அவர் டையையே பார்த்துக் கொண்டிருந்திருக்கிறீர்கள். அவரைக் கண்டு நீங்கள் பயந்துவிட்டீர்கள்!

உய்கோ : அவருக்கு ஒன்றும் மிரட்டுகிறாற்போல் உருவமில்லை.

ழெசிகா : பிறகு ஏன் நீங்கள் அவர் டையையே பார்க்கவேண்டும்?

உய்கோ : அவர் என்னைக் கண்டு மிரளாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ழெசிகா : சரிதான். அவர் உங்களிடம் என்ன சொன்னார்?

உய்கோ : நான் என்னைப் பற்றி சொன்னேன். என் தந்தை 'மரத்தை எரித்துக் கரி தயாரிக்கும் தோஸ்க் பிரதேச காடுகளின்



உபதலைவர் என்றும், கட்சியில் சேரவேண்டுமென்பதற்காக வீட்டைவிட்டு வந்துவிட்டேன்' என்றும் சொன்னேன்.

ழெசிகா : அதற்கு அவர் என்ன பதில் சொன்னார்?

உய்கோ : சரிதான் என்று சொன்னார்.

ழெசிகா : பிறகு?

உய்கோ : நான் முனைவர்பட்டம் பெற்றவன் என்பதை அவரிடம் ஒளிக்கவில்லை. ஆனால் நான் வெறும் அறிவு ஜீவி இல்லை என்பதையும், டைப் அடித்து நகல்எடுக்கும் வேலையானால் கூட அதைக் கேவலமானது என்று கருதாதவன் என்றும், தீவிர ஒழுங்குகட்டுப்பாட்டிலும் சொன்னதை அப்படியே செயலாற்றுவதிலும்தான் என் தன்மானம் இருப்பதாக நினைப்பவன் என்றும் அவருக்கு நன்கு உணர்த்திவிட்டேன்.

ழெசிகா : அதற்கு அவர் என்ன பதில் சொன்னார்?

உய்கோ : சரிதான் என்றார்.

ழெசிகா : இதற்கா இரண்டு மணி ஆயிற்று?

உய்கோ : இடையிடையே மௌனம்.

உய்கோ : இல்லை.

ழெசிகா : கேட்டிருந்தாலும் உங்களால் பதில் சொல்லியிருக்க முடியாது. உங்களுக்கேதான் ஒன்றும் தெரியாதே! என்னைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையா?

உய்கோ : இல்லை.

ழெசிகா : மரியாதை தெரியாதவர்.

உய்கோ : இதோ பார். இனிமேல் நீ அவரிடம் அக்கறை காட்டுவது வீண்வேலை; காலங் கடந்தது.

ழெசிகா : ஏன்?

உய்கோ : சொன்னால் ரகசியமாக வைத்துக்கொள்வாயா?

ழெசிகா : மூச்சுவிடமாட்டேன்.



உய்கோ : அவர் சாகப்போகிறவர்.

ழெசிகா : ஏன், ஏதாவது தீராத நோயா?

உய்கோ : அப்படியொன்றுமில்லை... அவர் கொலை செய்யப்படப் போகிறார், எல்லா அரசியல் தலைவர்களையும் போல.

ழெசிகா : விளையாட்டுப் போதும். பெட்டியில் உள்ளதையெல்லாம் எடுத்து வைக்கப்போகிறேன்.

உய்கோ : சரி போ.

ழெசிகா : உங்களுடைய பெட்டி மாத்திரம்தான் பாக்கி. சாவியைக் கொடுங்கள்.

உய்கோ : அதான் கொடுத்தேனே.

ழெசிகா : (காட்சி ஆரம்பத்தில் அவள் திறந்த பெட்டியை காண்பித்து) இதன் சாவியைத் தரவில்லை.

உய்கோ : இந்தப் பெட்டியில் உள்ளதை நானே எடுத்து வைத்து விடுகிறேன்.

ழெசிகா : இது உங்கள் வேலை இல்லை.

உய்கோ : எத்தனை நாள்களாக இது உன் வேலை? குடும்பப்பாங்கான பெண் போல் நடிக்கப்போகிறாயா?

ழெசிகா : நீங்கள் புரட்சிக்காரரைப் போல் நன்றாக நடிக்கிறீர்களே!

உய்கோ : புரட்சிக்காரர்களுக்குப் பணிப்பெண்கள் தேவையில்லை. அவர்கள் தலையைச் சீவிக் கொன்று விடுவார்கள்.

ழெசிகா : பதிலாக ஒல்காவைப்போல் கறுப்பு நிறக் கூந்தலையுடைய ஒநாய்களைத்தான் பிடிக்குமாக்கும்?

உய்கோ : பொறாமையா?

ழெசிகா : அப்படியென்றால் இந்தப் பெட்டியின் சாவியைத் தாருங்கள்.

உய்கோ : கண்டிப்பாக முடியாது.

ழெசிகா : இந்தப் பெட்டியில் அப்படி என்னதான் இருக்கிறது?



உய்கோ : வெட்கப்படும்படியானதொரு ரகசியம்!

ழெசிகா : என்ன ரகசியம்?!

உய்கோ : நான் என் அப்பாவின் பிள்ளையில்லை என்கிற ரகசியம்.

ழெசிகா : உங்கள் விருப்பம் வேண்டுமானால் அப்படிப்பட்டதாக இருக்கலாம். ஆனால் அது சாத்தியமில்லை, அத்தான். அவர் சாயல் அப்படியே உரித்துவைத்திருக்கிறது, உங்களிடம்.

உய்கோ : பொய். ழெசிகா, நான் அவரைப்போல் இருக்கிறேன் என்றா நினைக்கிறாய்?

ழெசிகா : விளையாட்டுப் போதும் இந்தப் பெட்டியைத் திறவுங்கள்.

உய்கோ : இதை திறப்பதில்லையென்று சபதம் செய்திருக்கிறேன்.

ழெசிகா : இது நிறைய அந்த ஒநாயின் கடிதங்கள்தாம் போலும்! அல்லது புகைப்படங்களோ, என்னவோ? திறவுங்கள்.

உய்கோ : மாட்டேன்.

ழெசிகா : திறந்தாலும்சரி, திறக்காவிட்டாலும் சரி. அதில் என்ன இருக்கிறதென்று எனக்குத் தெரியும்.

உய்கோ : என்னவாம்?

ழெசிகா : வந்து... வந்து... (அவள் மெல்ல கைகளை மெத்தைக்கு அடியே கொண்டுசென்று, அப்படியே முதுகுப்புறம் கொண்டு வந்து, போட்டோக்களை எடுத்துக் காட்டுகிறாள்) இதுதான்.

உய்கோ : ழெசிகா!

ழெசிகா : (வெற்றிப் பெருமிதத்துடன்) உங்கள் நீலநிறக் கோட்டுப் பையில் சாவி இருந்தது. அந்தப் பெண், உங்கள் உள்ளம் கொள்ளைகொண்ட இதயராணி, யார் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. அது நான் இல்லை. அது எந்த ஒநாயும் இல்லை. அது நீங்களேதான். ஆமாம். பெட்டியில் இருந்த பன்னிரண்டு போட்டோக்களும் உங்களுடையவைதாம். எல்லாமே நீங்கள் தனியாக இருக்கும் படங்கள்!

உய்கோ : அந்தப் போட்டோக்களை என்னிடம் கொடுத்துவிடு.

ழெசிகா : கனவுலகில் சஞ்சரிக்கும் இளமைப்பிராயத்தின் பன்னிரண்டு போட்டோக்கள். மூன்று வயதில் ஒன்று, எட்டு வயதில் ஒன்று, பத்து வயதில், பன்னிரண்டு வயதில், பதினாறு வயதில், அப்பா உங்களை வீட்டைவிட்டுத் துரத்தியபோது, நீங்கள் உங்களுடன் எடுத்துச் சென்றவை. அப்போது முதல் உங்களுடனேயே தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு உங்கள்மேலேயே உங்களுக்கு ஆசை!

உய்கோ : ழெசிகா, போதும் விளையாட்டு.

ழெசிகா : ஆறு வயதில் முரட்டுக் கழுத்துப்பட்டையுடைய சட்டை அணிந்து கொண்டிருந்திருக்கிறீர்கள். முழுவதும் வெல்வெட்டால் ஆன உடை, அதன்மேல் ஒரு டை. என்ன வசீகரமான சிறுவன்! எவ்வளவு சாதுவான பிள்ளை! ஆனால் அம்மாடியோவ்! மிக சாதுவாக இருக்கும் பிள்ளைகள் தாம் பிற்காலத்தில் அதிபயங்கரப் புரட்சிக்காரர்களாக மாறுகிறார்கள்! சாதுக் குழந்தைகளை நம்பக்கூடாது.

(போகட்டும் என விட்டுவிட்டவன் போலப் பாசாங்கு செய்த உய்கோ திடீரென்று அவள்மேல் பாய்கிறான்).

உய்கோ : அவற்றை என்னிடம் கொடுத்துவிடு. உன் ஜாலம் பலிக்காது. நான் அவைகளை பறித்துக்கொண்டுதான் விடுவேன்.

ழெசிகா : என்னை விடுங்கள். (அவன் அவளைக் கட்டிலில் தள்ளுகிறான்) ஐய்யோ இப்போது நாம் இருவருமே சாகப் போகிறோம். அழுத்தாதீர்கள், விட்டுவிடுங்கள்.

உய்கோ : அவற்றைக் கொடுத்துவிடு.

ழெசிகா : துப்பாக்கி எந்த நொடியும் வெடித்துவிடும் நிலையில் இருக்கிறது என்று சொல்கிறேன். (உய்கோ எழுந்திருக்கிறான். தன் முதுகுக்கு பின்னால் பிடித்துக் கொண்டிருந்த துப்பாக்கியைக் காட்டி) இதுவும் பெட்டியில் தான் இருந்தது.

உய்கோ : கொடு.



(அவன் அவளிடமிருந்து அதைப் பறித்து, சட்டைப் பைகளில் குடைந்து சாவியை எடுத்து, பெட்டிக்கு அருகே வந்து, அதைத் திறந்து போட்டோக்களையும் துப்பாக்கியையும் பெட்டிக்குள்ளே வைக்கிறான். சற்று நேரத்துக்குப்பின்)

ழெசிகா : எதற்காக அந்தக் கைத்துப்பாக்கி?

உய்கோ : எப்போதும் ஒன்று கைவசம் வைத்திருப்பேன்.

ழெசிகா : பொய். இங்கே வருவதற்கு முன்பாக உங்களிடம் கிடையாது. இந்தத் துப்பாக்கி எதற்காக?

உய்கோ : உனக்குத் தெரியவேண்டுமா?

ழெசிகா : ஆமாம். ஆனால் உண்மையைச் சொல்லியாக வேண்டும். உங்கள் வாழ்க்கையிலிருந்து என்னைப் பிரித்துவைக்க உங்களுக்கு உரிமை இல்லை.

உய்கோ : யாரிடமும் சொல்லமாட்டாயல்லவா?

ழெசிகா : இவ்வுலகில் யாரிடமும் சொல்லமாட்டேன்.

உய்கோ : எதரரை கொல்வதற்காக.

ழெசிகா : நல்ல கதையளக்கிறீர்கள், எதற்காக அவரைக் கொல்ல வேண்டும்? அதிலும் முன்பின் தெரியாத ஒரு மனிதரை!

உய்கோ : நான் சொல்வது நிஜம்தான் என்று என் மனைவி நம்புவதற்காக... என்னை நீ நம்புவாயா?

ழெசிகா : நானா...? உங்களை வியந்து போற்றுவேன். வெளி உலகுக்குத் தெரியாமல் மறைத்துவைத்து உணவளித்துக் காப்பாற்றுவேன். உற்சாகமூட்டுவேன். பின் அக்கம் பக்கத்தவர் நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டபின், போலீஸ்காரர்கள் உங்களைப் பிடிக்க வரும்போது, உங்களைக் கட்டி அணைத்துக்கொண்டு "என் அன்பே, நான் உங்களைக் காதலிக்கிறேன்" என்று அலறுவேன்.

உய்கோ : அதை இப்போதேதான் சொல்லேன்.

ழெசிகா : எதை?



உய்கோ : நீ என்னைக் காதலிக்கிறாய் என்பதை.

ழெசிகா : நான் உங்களை காதலிக்கிறேன்.

உய்கோ : நிஜமாகச் சொல்லவேண்டும்.

ழெசிகா : நான் உங்களைக் காதலிக்கிறேன்.

உய்கோ : இது நிஜமில்லை.

ழெசிகா : பின் எதற்காக என்னை அப்படிச் சொல்லச் சொல்கிறீர்கள்? இது உங்கள் வழக்கமில்லையே.

உய்கோ : எனக்கே தெரியவில்லை. நீ என்னை நேசிக்கிறாய் என்ற நினைவே இன்பமாயிருக்கிறது. அதற்கு எனக்கு உரிமை இல்லையா, என்ன? எங்கே... சொல், அழுத்தமாகச் சொல்.

ழெசிகா : நான் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களை நேசிக்கிறேன். சே... இப்படியில்லை... நான் உங்களை... நேசிக்கிறேன். அது பாழாய்ப்போயிற்று! நீங்கள் இதை எப்படிச் சொல்வீர்கள்?

உய்கோ : நான் உன்னை நேசிக்கிறேன்.

ழெசிகா : பார்த்தீர்களா... நீங்களும் என்னைப் போலத்தான்... உங்களுக்கும்தான் சொல்லத் தெரியவில்லை.

உய்கோ : ழெசிகா, நான் சொன்னதை நீ நம்பவில்லையா?

ழெசிகா : நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்பதையா?

உய்கோ : ஊஹூம்... நான் எதரரைக் கொல்லப்போகிறேன் என்பதை.

ழெசிகா : இல்லையே, நம்புகிறேன்.

உய்கோ : நேராகக் கூர்ந்து என்னைப்பார். சிரிக்காதே. இப்போதே கேள். எதரரைப் பற்றி நான் சொன்னது உண்மை. கட்சி என்னை இதற்காக அனுப்பியிருக்கிறது.

ழெசிகா : அதில் எனக்குச் சந்தேகமில்லை. இதை ஏன் முன்னமேயே என்னிடம் சொல்லவில்லை?

உய்கோ : சொல்லியிருந்தால் ஒருகால் நீ என்னுடன் வர மறுத்திருப்பாயோ என்பதால்தான்.

ழெசிகா : நான் ஏன் மறுக்கவேண்டும்? இது ஆண்கள் விவகாரம். எனக்கு ஒன்றும் சம்பந்தமில்லை.



உய்கோ : இது ஒரு வினோதமான பணி. அவன் இருக்கிறானே, அவன் மிகவும் அழுத்தமான ஆசாமியாகத் தோன்றுகிறது.

ழெசிகா : இருக்கட்டுமே. நாம்தான் அவருக்கு மயக்கமருந்து கொடுத்துப் பீரங்கி வாயிலே கட்டிவிடப்போகிறோமே!

உய்கோ : ழெசிகா! நான் சீரியஸாகச் சொல்கிறேன்.

ழெசிகா : நானும்தான்.

உய்கோ : நீ சீரியசாக இருப்பதுபோல் நடிக்கிறாய்.

ழெசிகா : இல்லை. நீங்கள்தான் நடிக்கிறீர்கள்.

உய்கோ : இதற்கு முடிவே கிடையாது. (கதவு தட்டப்படும் ஓசை) உள்ளே வாருங்கள்.

(அவன் கதவைத் திறக்கச் செல்லும்போது ழெசிகா பெட்டியை மறைத்து அவைக்கு முதுகைக் காட்டியபடி திரும்பிக்கொண்டு நிற்கிறாள்.)

### காட்சி — 2

ஸ்லிக், ஜார்ஜ், உய்கோ, ழெசிகா

ஜார்ஜ் : நாங்கள்தான்.

உய்கோ : சரி, என்ன விஷயம்?

ஜார்ஜ் : ஏதாவது உதவி தேவைப்படுமோ என்று பார்த்துவிட்டுப் போக வந்தோம்.

ழெசிகா : மிக்க நன்றி. ஆனால் எனக்கு யார் உதவியும் தேவையில்லை.

ஸ்லிக் : (நாற்காலியின் முதுகுப்புறம் போட்டிருக்கும் ஓர் உள்ளாடையை எடுத்துக் கைகளில் விரித்துப் பிடித்துக் கொண்டு) இதை நடுவில் மடிக்கவேண்டும், இல்லையா? பிறகு கைப்பக்கங்களை உட்புறமாக மடிக்கவேண்டும். சரிதானா?

ஜார்ஜ் : அவைகளைத் தொடாதே, ஸ்லிக்! ஏதாவது கற்பனைகள் தோன்ற ஆரம்பித்துவிடப்போகிற!... அவனை மன்னித்து விடுங்கள். நாங்கள் பெண்களைப் பார்த்தே ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது!

ஸ்லிக் : பெண்ணினம் எப்படி இருக்கும் என்பதுகூட மறந்துவிட்டது.

(அவர்கள் ழெசிகாவை ஏற இறங்கப் பார்க்கிறார்கள்)

ழெசிகா : இங்கு கிராமத்தில் பெண்களே இல்லையா?

ஸ்லிக் : இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் வெளியே போவதில்லையே.

ஜார்ஜ் : பழைய காரியதரிசி ஒவ்வோர் இரவும் சுவர்ஏறிக் குதித்து வீடுவீடாக நுழைவார். முடிவு, ஒருநாள் அவர்தலை குளத்தில் மிதந்தது! அப்போதே பெரியவர் தீர்மானித்துவிட்டார், அடுத்து வரும் காரியதரிசி கல்யாணமானவராகத்தான் இருக்கவேண்டும் என்று. அப்போதுதானே அவருக்கு வீட்டிலேயே நிறைவு கிடைக்கும்.

உய்கோ : இவர்கள் எதரருடைய மெய்க்காப்பாளர்கள்.

ழெசிகா : அப்படித்தான் இருக்கவேண்டும் என்று நானே நினைத்தேன்.

ஸ்லிக் : எங்களைப் பார்த்தால் உங்களுக்கு பயமாக இல்லை?

ழெசிகா : பயமா? நேர் மாறாகச் சொல்கிறீர்கள். என்ன! நீங்கள் இதை எல்லாம் (இயந்திரத் துப்பாக்கியையும், கைத்துப்பாக்கியையும் காட்டி) சுமந்துகொள்ளாமல் இருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும். இவற்றைத் தூர இந்த மூலையில் வையுங்களேன்.

ஜார்ஜ் : நடக்காது.

ஸ்லிக் : கூடாது.

ழெசிகா : தூங்கும்போதுகூட இவற்றைப் பிரிந்து இருப்பது இல்லையா?

ஜார்ஜ் : ஊஹூம்.

ழெசிகா : உங்கள் தலைவர் அந்த அளவுக்குப் பயந்தவரா?

ஸ்லிக் : அவருக்கு ஒன்றும் பயமில்லை. ஆனால் தாம் கொல்லப் படுவதை அவர் விரும்பவில்லை.

ழெசிகா : அவரை எதற்குக் கொல்லப்போகிறார்கள்?

ஸ்லிக் : எதற்கு என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம், அவரைக் கொல்ல யாரோ முயல்கிறார்கள். நண்பர்கள் வந்து அவரை இதுபற்றி எச்சரித்துவிட்டுப் போயிருக்கிறார்கள், பதினைந்து நாள்களுக்கு முன்பாக.



ழெசிகா : சுவாரஸ்யமாக இருக்கிறதே.

ஸ்லிக் : பாதுகாப்பு அவசியம். அவ்வளவுதான். (ஸ்லிக் பேசிக் கொண்டிருக்கும் போதே ஜார்ஜ் சும்மா மேலெழுந்த வாரியாகப் பார்ப்பது போன்ற பொய்யானதொரு பாவனையில், அறையை ஒருமுறை தீவிரமாக நோட்டம் விடுகிறான். திறந்து கிடக்கும் அலமாரிக்குச் சென்று அதிலிருக்கும் உய்கோவின் உடையை வெளியே எடுக்கிறான்)

ஜார்ஜ் : ஏய் ஸ்லிக், இங்கே பாரேன். பிரமாதமாய் இல்லை?!

ஸ்லிக் : அவர்வேலைக்கு இதெல்லாம் தேவை. (ஜார்ஜ் உடையைத் தூசுதட்டுகிற சாக்கில் சோதித்துப் பார்க்கிறான்).

ஜார்ஜ் : சுவர் அலமாரிகளையெல்லாம் நம்ப முடியாது. சுவரெல்லாம் பொலபொலவென்றிருக்கிறது.

(உடையைக் கொண்டுபோய் சுவர்அலமாரியில் மீண்டும் வைத்து விட்டு ஸ்லிக் அருகே திரும்பி வருகிறான். ழெசிகாவும் உய்கோவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.)

ழெசிகா : உங்களுக்கு அருந்தக்கூட எதுவும் கொடுக்க இயலாமல் இருக்கிறது.

ஸ்லிக் : நீங்கள் கொடுத்தாலும் நாங்கள் டியூட்டியில் இருக்கும் போது எதுவும் பருகுவதில்லை.

உய்கோ : இப்போது நீங்கள் டியூட்டியில் இருக்கிறீர்களா?

ஜார்ஜ் : எப்போதுமே நாங்கள் டியூட்டிதான்.

உய்கோ : ஓஹோ!

ஜார்ஜ் : கட்டில் எவ்வளவு பெரியது, பார்த்தாயா! மூன்றுபேர் படுக்கலாம்போல் இருக்கிறது.

ஸ்லிக் : நாலுபேருக்குக்கூட போதும்.

ழெசிகா : உங்களுக்குக் கட்டில் இல்லையா?

ஸ்லிக் : (பூரிப்புடன்) ஜார்ஜ்!



ஜார்ஜ் : (சிரிப்புடன்) ம்!

ஸ்லிக் : கட்டில் இல்லையா என்று கேட்கிறார்கள்! ஊஹூம் (ஸ்லிக்கைக் காண்பித்து) இவன் ஆபீஸ் தரையில் தூங்குவான். நான் பெரியவர் அறைக்கு வெளியே தாழ்வாரத்தில்.

ழெசிகா : அது கஷ்டமில்லையா?

ஜார்ஜ் : அது உங்கள் கணவருக்கு கஷ்டமாயிருக்கலாம். பார்த்தால் பூஞ்சையாய்த் தெரிகிறார். எங்களுக்கெல்லாம் பழக்கம். (குனிந்து கட்டிலுக்குக் கீழே பார்க்கிறான்).

உய்கோ : என்ன பார்க்கிறீர்கள்?

ஜார்ஜ் : சில சமயம் எலிகள் இருக்கும். (எழுந்துகொள்கிறான்)

உய்கோ : ஒன்றும் இல்லையா?

ஜார்ஜ் : இல்லை.

(சிறிது நேரம் கழித்து உய்கோ பொறுமை இழந்து முகம் வெளுத்து எழுந்து கொள்கிறான். ழெசிகாவும் எழுந்து கொள்கிறாள்)

உய்கோ : இவர்கள் உடல்கட்டைப் பார்த்தாயா?

ழெசிகா : தூண்போல் இருக்கிறது. ஆஹா! நீங்கள் மூன்றுபேரும் நண்பர்கள் ஆகப்போகிறீர்கள். என் கணவருக்குக் கொலை காரர்கள் என்றால் மிகவும் பிடிக்கும். அவருக்குத் தாமும் அப்படி ஆக வேண்டும் என்றுகூட ஓர் ஆசை உண்டு.

ஸ்லிக் : அதற்கான உடல்வாகு இல்லையே! காரியதரிசியாக இருக்கத் தான் தகுதி.

உய்கோ : நாம் மூவரும் ஒருவரை ஒருவர் நீ என்று ஒருமையில் அழைத்துக் கொள்ளலாம் இல்லையா?

ஸ்லிக் : உனக்கு இஷ்டமென்றால் அப்படியே, தம்பி!

ழெசிகா : எங்களைப் பார்க்க நீங்கள் வந்ததிலே மிக்க மகிழ்ச்சி.

உய்கோ : (சென்று கதவைத் திறக்கிறான்) உங்களுக்கு எப்போது விருப்பமோ, அப்போது மீண்டும் வாருங்கள். இதை உங்கள்



வீடுமாதிரி நினைத்துக்கொள்ளலாம்.

(ஸ்லிக் நிதானமாகக் கதவிடம் சென்று திரும்ப மூடிவிட்டு)

ஸ்லிக் : போகிறோம், இப்போதே போகிறோம். அதற்கு முன் ஒரு சிறிய சடங்கு இருக்கிறது.

உய்கோ : அது என்ன சடங்கு?

ஸ்லிக் : அறையைச் சோதனை போடவேண்டும்.

உய்கோ : கூடாது.

ஜார்ஜ் : கூடாதா?

உய்கோ : நீங்கள் எதையும் சோதனை போடக்கூடாது.

ஸ்லிக் : சும்மா அலட்டிக்கொள்ளாதே தம்பி, எங்களுக்கு உத்தரவு இருக்கிறது.

உய்கோ : யாருடைய உத்தரவு?

ஸ்லிக் : எதரர் உத்தரவு.

உய்கோ : எதரர் என் அறையைச் சோதனைபோடச் சொல்லி உத்தரவு போட்டாரா?

ஜார்ஜ் : இது என்ன அசட்டுத்தனமான பேச்சு. எங்களிடம் முன்னெச்சரிக்கையாகச் சொல்லியிருக்கிறார்கள், "சமீபத்தில் ஒருநாள் இங்கு ஒரு கொலைமுயற்சி நடக்கப்போகிறது" என்று. பைகளை எல்லாம் சோதனை போடாமல் இங்கே உள்ளே அனுமதித்து விடுவார்கள் என்று நினைக்கிறாயா? புறாவைச் சுடக்கூட உனக்குத் துப்பு இருக்காது என்று எனக்குத் தோன்றினாலும், கைகுண்டோ அல்லது வேறு ஏதேனும் வெடிமருந்தோ வைத்துக்கொண்டு நீ இங்கு சுற்றிக் கொண்டிருக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறதே.

உய்கோ : எதரர் குறிப்பாக என்னுடைய சாமான்களை சோதனை போடும்படியாக உங்களிடம் சொன்னாரா என்று கேட்கிறேன்.

ஸ்லிக் : இங்கு யாரும் பரிசோதனைக்கு உள்ளாகாமல் நுழைவதில்லை. இது விதி. அவ்வளவுதான்.

உய்கோ : என்னை நீங்கள் சோதனை போடக் கூடாது. இது விதிவிலக்கு, அவ்வளவுதான்

ஜார்ஜ் : நீ கட்சியைச் சேர்ந்தவன்தானே?

உய்கோ : ஆமாம்.

ஸ்லிக் : கட்சி உனக்கு ஓர் உத்தரவு போட்டால் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று தெரியாதா?

உய்கோ : தெரியும்.

ஸ்லிக் : பின்னே?

உய்கோ : கட்சி உத்தரவுகளை மதிக்கிறேன். ஆனால் எனக்குச் சுயகௌரவமும் உண்டு. என்னைக் கேலிக்குரியவனாக்க வேண்டும் என்பதற்காகவே போடப்பட்ட முட்டாள் தனமான உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியமாட்டேன்.

ஸ்லிக் : அவன் சொல்வதைக் கேட்டாயா? ஜார்ஜ், உனக்கு சுய கௌரவம் உண்டா?

ஜார்ஜ் : உண்டென்று நான் நினைக்கவில்லை; இப்போது தெரிந்து விடப் போகிறது. ஸ்லிக், உனக்கு?

ஸ்லிக் : பைத்தியம் மாதிரி பேசாதே – சுயகௌரவம் இருக்க வேண்டும் என்றால் குறைந்தபட்சம் ஒருத்தன் காரியதரிசியாகவாவது இருக்கவேண்டும்.

உய்கோ : அட முட்டாள்களா! நான் கட்சியிலே சேர்ந்ததே, ஒருநாள் எல்லாருக்கும் – அவர் காரியதரிசியானாலும் சரி, வேறு எவரானாலும் சரி – தத்தம் சுயகௌரவத்திற்கு உரிமை இருக்கவேண்டும் என்பதற்காகத்தான்.

ஜார்ஜ் : அவன்வாயை மூடு, ஸ்லிக்! என்னால் தாங்கமுடியவில்லை. தம்பி, நாங்கள் கட்சியிலே சேர்ந்தது, பட்டினி கிடந்து அலுத்துப்போன காரணத்தால்தான்.

ஸ்லிக் : மேலும் எங்களைப் போன்றவர்கள் எல்லாம் ஒருநாள் வயிறு நிரம்பச் சாப்பிடவேண்டும் என்பதற்காகவுந்தான்.



ஜார்ஜ் : ஆ! வெட்டிப்பேச்சு போதும். ஸ்லிக், முதலில் அதைத் திற.

உய்கோ : நீ அதைத் தொடக்கூடாது.

ஸ்லிக் : தொடக்கூடாதா, தம்பி? நீ எப்படி எங்களைத் தடுக்கப் போகிறாய்?

உய்கோ : ரோடுரோலரை எதிர்த்துச் சண்டை போட முயல மாட்டேன். நீ மட்டும் அதுமேலே கை வைத்தால் இன்று மாலையே நாங்கள் இந்த வீட்டைவிட்டுப் போகிறோம். எதரர் வேறு காரியதரிசி தேடிக்கொள்ள வேண்டியதுதான்.

ஜார்ஜ் : ஓஹோ! மிரட்டுகிறாயா! உன்னைப் போன்ற காரியதரிசி ஆயிரம் கிடைக்கும்.

உய்கோ : சரி, சோதனைபோடு. அந்த பயம் இல்லையென்றால் சோதனை போடேன். (ஜார்ஜ் தலையைச் சொறிந்து கொள்கிறான். இதுவரை அமைதியாக இருந்த ழெசிகா அவர்களிடம் வருகிறாள்)

ழெசிகா : எதரருக்கு இதுபற்றிப் போன்பண்ணிக் கேட்டுவிட வேண்டியது தானே.

ஸ்லிக் : எதரருக்கா?

ழெசிகா : உங்களுக்குள்ளே ஒரு சமாதானம் செய்துவைப்பார். (ஜார்ஜும் ஸ்லிக்கும் ஒருவரை ஒருவர் குறிப்பாகப் பார்த்துக் கொள்கிறார்கள்)

ஜார்ஜ் : செய்யலாம். (டெலிபோனை எடுத்து டயல் செய்கிறான்) ஹலோ லெயோனா? இந்தப் பொடியன் சோதனைக்கு உட்பட ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறான் என்று பெரியவரிடம் போய்ச் சொல்லு. என்ன? – ஏதேதோ கதை. (ஸ்லிக்கிடம் திரும்பி வந்து) பெரியவரைப் பார்க்கப் போயிருக்கிறான்.

ஸ்லிக் : சரி. நான் ஒன்றுமட்டும் இப்போதே சொல்லி விடுகிறேன். எனக்கு எதரர்மேலே அபிமானம் உண்டு; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் தபால் காரனைக் கூட விடாமல்